KAYALPATTINAM MUNICIPALITY
FORM 3
Minutes of the Meeting held on 27.06.2017

<table>
<tr><th>Date of Council meeting</th><th>Deceison Number</th><th>Subject of the Agenda</th><th>Resolution</th></tr>
<tr><td>27.06.2017</td><td>1394</td><td>மன்றப் பொருள்:1<br>காயல்பட்டணம் நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட குத்தகையினங்களுக்கு BY LAW (துணை விதிகள்) மன்றத்தின் பார்வைக்கு.<br>குத்தகை விதிகள்<br><u>காயல்பட்டணம் நகராட்சிக்கு சொந்தமான தினசரி சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்</u><br>1).சந்தை உரிமதாரர் தனது சொந்த பொறுப்பில் சுத்தம் செய்து சுகாதாரமாக வைத்துக்கொள்ள வேண்டும். நகராட்சி துப்புரவுப் பணியாளர்கள் இப்பணிக்கு ஈடுபடுத்தப்படமாட்டாது. பொது மக்களின் புகாருக்கு இடமின்றி சந்தையை சுகாதாரமாக பராமரிக்கப்பட வேண்டியது உரிமதாரரின் பொறுப்பு.<br>2).நகர் மன்றத்தின் அனுமதியின்றி சந்தைக்குள் தற்காலிகமாகவோ, நிலையாகவோ எவ்வித கட்டிடங்களும், கொட்டகைகளும் கட்டக்கூடாது. அவ்வாறு செய்தால் நகராட்சியால் காலி செய்யப்பட்டு அதற்காக ஏற்படும் செலவும் வசூல் செய்யப்படும்.<br>3).சந்தையில் அபிவிருத்தி பணிகள் ஏதேனும் உரிமகாலத்தில் மேற்கொள்ளப்படின் சந்தையை தற்காலிகமாகவோ அல்லது முழுமையாக மூடப்பட்ட காலத்திற்கு தவணைத்தொகை குறைவு செய்து கொடுக்கப்படும். முழுமையாக மூடாமல் ஒவ்வொரு பகுதியாக அபிவிருத்தி செய்யப்பட்டால் தவணைத்தொகை ஏலம் கழிவு செய்யப்படமாட்டாது. இதனால் உரிமதாரருக்கு யாதொரு இழப்பீடும் கோர உரிமையில்லை.
<table>
<tr><th>வரிசை எண</th><th>விபரம்</th><th>தொகை</th></tr>
<tr><td>.</td><td>சந்தை உள்புறம்</td><td></td></tr>
<tr><td>1</td><td>மீன் கடை</td><td>ரூ.50/-</td></tr>
<tr><td>2</td><td>கறி கடை</td><td>ரூ.50/-</td></tr>
<tr><td>3</td><td>காய்கனி கடை</td><td>ரூ.50/-</td></tr>
</table></td><td>பார்வையிட்டு அனுமதிக்கபடுகிறது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | சந்தை வெளிப்புறம் | |
| 4 | காய்கனி | ரூ.20/- |
| 5 | பழங்கள் | ரூ.20/- |
| 6 | இதர பொருட்கள் வியாபாரம் | ரூ.20/- |
| | நடை பாதை வியாபாரம் | |
| 7 | கோழி வியாபாரம் | ரூ.30/- |
| 8 | தள்ளுவண்டி வியாபாரம் | ரூ.20/- |
| 9 | டிபன் கடைகள் | ரூ.20/- |
| 10 | புல் வியாபாரம் | ரூ.10/- |

4).தினசரி சந்தையில் கட்டணம் எழுதப்பட்ட பலகைகளை உரிமதாரர் தன் சொந்த செலவில் ஆணையாளர் குறிப்பிடும் பகிரங்கமான இடத்தில் தொங்கவிட்டு பாதுகாத்து வரவேண்டும்.
5).சந்தையில் எரிக்கப்படும் மின் விளக்குகளுக்கு ஏற்படும் மின்சாரக்கட்டணம் மற்றும் அது சம்மந்தமான செலவுகளை உரிமதாரரே செலுத்த வேண்டும்.
6).உரிமதாரர்கள் தினசரி சந்தையினுள் வியாபாரப் பொருட்கள் வாங்க விற்க வரும் வியாபாரிகள் பொதுமக்கள் வசதியை பேணும் பொருட்டு வியாபார பொருட்கள் ஒழுங்காக பாதைக்கு இடையூறு இல்லாமல் வைத்து வியாபாரம் செய்ய வேண்டும்.
7).வியாபாரப் பொருட்கள் சந்தைக்கு வெளியே பொது மக்களுக்கோ, போக்குவரத்துக்கோ இடைஞ்சலாக வைத்து வியாபாரம் செய்யக்கூடாது.
8).உரிமதாரர்கள் நகராட்சியால் வரையறுக்கப்பட்டுள்ள கட்டணம் மட்டும் தான் வியாபாரிகளிடம் வசூலிக்க வேண்டும். கூடுதல் கட்டணம் வசூலிக்கக்கூடாது. அவ்வாறு வசூல் செய்தால் உரிமத்தை ரத்து செய்து மறு ஏலம் விட நகராட்சிக்கு உரிமையுண்டு. இழப்புக்கு உரிமதாரரையே பொறுப்பாக்கப்படும்.
9).உரிமதாரர்கள் வியாபாரிகளிடம் கட்டணம் வசூல் செய்யும்போது அதற்கான முறையாக நகராட்சி முத்திரை பதிக்கப்பட்ட கட்டண ரசீது கொடுக்கப்பட வேண்டும்.
10).உரிமதாரர் சந்தை கட்டண வசூல் பணிக்கு நியமிக்க இருக்கும் நபர்கள் விபரம் புகைப்படத்துடன் கொடுக்கப்பட வேண்டும்.
தினசரி சந்தைக்குள் விற்பனைக்கு கொண்டு வரப்படும் பொருட்கள் சந்தைக்கு வெளிப்பகுதியில் வைத்து வியாபாரம் செய்தாலும் சந்தை உரிமதாரருக்கு அட்டவணையில் கண்ட விபரப்படியான கட்டணம் கொடுக்கப்பட வேண்டும்.

**மரங்களின் மேலாதாயம் எடுப்பது பற்றிய சிறப்பு கட்டுப்பாடுகள்**

1).மரத்தையோ, மரக்கிளையோ அரிய நிலையில் இருப்பது ககாரணமாகவே எலக்ட்ரிக் கம்பிகளுக்கு பாதிப்பு ஏற்படலாமென்ற காரணத்திற்காகவோ வெட்டிவிட்டாலும்

உரிமத்தொகையில் எவ்வித தள்ளுபடியும் கொடுக்கப்படமாட்டாது.
2).மரங்கள் மகசூல் மட்டும் தான் உரிமதாரரை சேர்ந்தது. மரமோ, மரக்கிளையோ சேராது. மரங்களை சரியாக வளர்த்து நல்ல நிலமையில் வைத்துக்கொள்வதற்கு உரிமதாரரே பொறுப்பாளியாவார். அவைகளை உரிமதாரர் வெட்டவோ, சேதப்படுத்தவோ கூடாது.
3).மழை இல்லாமலோ மற்ற காரணங்களினாலோ மகசூல் நஷ்டம் அடைந்தால் உரிமத்தொகையில் தள்ளிக்கொடுக்கப்படமாட்டாது.
4).உரிமக்காலம் முடிந்தவுடன் எவ்வித தாமதமின்றி முதிர்ந்த காய், கனிகளை மட்டும் எடுத்துக் கொண்டு நகராட்சி வசம் ஒப்படைக்க வேண்டும். இளநீர் இறக்கக்கூடாது. அவ்விதம் இறக்கப்படுவதாக புகார் வரப்பெற்றால் சட்டபூர்வமான தக்க நடவடிக்கை எடுப்பதுடன் சம்மந்தப்பட்ட உரிமதாரரை எதிர்காலத்தில் நடைபெறும் ஏலங்களில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டாது.
5).மரங்களையோ, கிளைகளையோ முதிராத காய்களையோ உரிமதாரரோ அல்லது மற்ற யாராவது வெட்டினாலும் அல்லது வேறு விதத்தில் கெடுதி உண்டு பண்ணினாலும் ஆணையாளர் குறிப்பிடும் அபராதத்தையும் நஷ்டஈடு தொகையையும் செலுத்த கட்டுப்பட்டவராவார்.

**கடற்கரை பூங்கா வாகனம் நிறுத்தக்கட்டணம் வசூல் உரிமம்**

| வ.எண் | விபரம் | தொகை |
|---|---|---|
| 1 | வேன் ,சீருந்து, டாக்சி ஒன்றுக்கு | ரூ.20/- |

மேற்படி தொகையைவிட கூடுதலாக கட்டணம் வசூலிக்கக் கூடாது.
1).வாகனங்களின் கட்டணம் விபரம் எழுதப்பட்ட பலகை குத்தகைதாரர் தன் சொந்த செலவில் ஆணையாளர் குறிப்பிடும் பகிரங்கமான இடத்தில் தொங்கவிட்டு பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.
2).குறிப்பிட்ட கட்டணத்திற்கு மேல் வசூல் செய்யக்கூடாது. மீறினால் உரிமம் ரத்து செய்யப்பட்டு இழப்புக்கு உரிமதாரரை பொறுப்பாக்கப்படும்.
3).மேற்படி கட்டணத்திற்கான ரசீதுகள் சொந்த செலவில் அச்சிட்டு மேற்படி ரசீதில் உரிய பதிவுகளுடன் இந்நகராட்சி முத்திரை பெற்று வழங்க வேண்டும்.
4).உரிமதாரர் வசூல் பணிக்கு நியமிக்கவிருக்கும் நபர்கள் விபரம் முழு முகவரி புகைப்படத்துடன் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

**புதிய பேருந்து நிலையத்தில் வந்துபோகும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம்**

1).பேருந்துகளுக்கு ஒரு நாளைக்கு ஒருமுறை மட்டுமே கட்டணம் வசூல் செய்யப்படவேண்டும்.
2).பேருந்து கட்டணமாக ஒருநாளைக்கு ரூ.5/- வீதம் வசூலிக்கப்பட வேண்டும். மீறினால் உரிமம் ரத்து செய்யப்படுவதுடன் இழப்புக்கு உரிமதாரரையே பொறுப்பாக்கப்படும்.

**கடற்கரை பூங்காவில் சிறுகடைகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம்**

| வ.எண் | விபரம் | தொகை |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 1 | சிறு வியாபாரிகள் ஒன்றுக்கு | ரூ.10/- |
| 2 | தள்ளுவண்டி வியாபாரிகள் ஒன்றுக்கு | ரூ.20/- |
| 3 | ஐஸ்கிரீம் வண்டி ஒன்றுக்கு | ரூ.50/- |

1).கடற்கரைப் பகுதியில் (மணல்பரப்பில்) கடைகள் அமைக்க அனுமதி கிடையாது.
2).கடற்கரை பகுதியின் வெளிப்புறம் (அணுகுசாலையின் அருகில்) கடை அமைக்க அனுமதி வழங்கப்பட வேண்டும்.
3).விளையாட்டு சாதனங்கள் அனுமதிக்கக்கூடாது.
4).வியாபாரிகளால் உருவாக்கப்படும் குப்பைகளை குத்தகைதாரர் சொந்த பொறுப்பில் சுத்தம் செய்யப்பட வேண்டும். தவறினால் உரிய கட்டணம் வசூலிக்கப்படும்.
5).தடைசெய்யப்பட்ட 40 மைக்ரான் கீழ் உள்ள பிளாஸ்டிக் கப்கள் (ம) பிளாஸ்டிக் பைகள் விற்பனை செய்யக்கூடாது.

**<u>ஆடு,மாடு அறுவைக்கூடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம்</u>**

| வ.எண் | விபரம் | தொகை |
|---|---|---|
| 1 | ஆடு ஒன்றுக்கு | ரூ.20/- |
| 2 | மாடு ஒன்றுக்கு | ரூ.30/- |

மேற்படி தொகையைவிட கூடுதலாக கட்டணம் வசூலிக்கக் கூடாது.
1ஆடு, மாடு அறுவைக்கூடத்தில் கட்டணம் எழுதப்பட்ட பலகைகளை உரிமதாரர் தன் சொந்த செலவில் ஆணையாளர் குறிப்பிடும் பகிரங்கமான இடத்தில் தொங்கவிட்டு பாதுகாத்து வரவேண்டும்.
2).ஆடு, மாடு அறுவைக்கூட உரிமதாரர் தனது சொந்த பொறுப்பில் சுத்தம் செய்து சுகாதாரமாக வைத்துக்கொள்ள வேண்டும். நகராட்சி துப்புரவுப் பணியாளர்கள் இப்பணிக்கு ஈடுபடுத்தப்படமாட்டாது. பொது மக்களின் புகாருக்கு இடமின்றி ஆடு, மாடு அறுவைக்கூடத்தை சுகாதாரமாக பராமரிக்கப்பட வேண்டியது உரிமதாரரின் பொறுப்பு.
3).நகர் மன்றத்தின் அனுமதியின்றி ஆடு,மாடு அறுவைக்கூடத்திற்குள் தற்காலிகமாகவோ, நிலையாகவோ எவ்வித கட்டிடங்களும், கொட்டகைகளும் கட்டக்கூடாது. அவ்வாறு செய்தால் நகராட்சியால் காலி செய்யப்பட்டு அதற்காக ஏற்படும் செலவும் வசூல் செய்யப்படும்.
3).ஆடு,மாடு அறுவைக்கூடத்திற்குள் அபிவிருத்தி பணிகள் ஏதேனும் உரிமகாலத்தில் மேற்கொள்ளப்படின் சந்தையை தற்கலிகமாகவோ அல்லது முழுமையாக மூடப்பட்ட காலத்திற்கு

| | | | |
|---|---|---|---|
| | | தவணைத்தொகை குறைவு செய்து கொடுக்கப்படும். முழுமையாக மூடாமல் ஒவ்வொரு பகுதியாக அபிவிருத்தி செய்யப்பட்டால் தவணைத்தொகை ஏலம் கழிவு செய்யப்படமாட்டாது. இதனால் உரிமதாரருக்கு யாதொரு இழப்பீடும் கோர உரிமையில்லை.<br>4).ஆடு,மாடு அறுவைக்கூடத்திற்குள் எரிக்கப்படும் மின் விளக்குகளுக்கு ஏற்படும் மின்சாரக்கட்டணம் மற்றும் அது சம்மந்தமான செலவுகளை உரிமதாரரே செலுத்த வேண்டும்.<br>5).உரிமதாரர்கள் நகராட்சியால் வரையறுக்கப்பட்டுள்ள கட்டணம் மட்டும் தான் வியாபாரிகளிடம் வசூலிக்க வேண்டும். கூடுதல் கட்டணம் வசூலிக்கக்கூடாது. அவ்வாறு வசூல் செய்தால் உரிமத்தை ரத்து செய்து மறு ஏலம் விட நகராட்சிக்கு உரிமையுண்டு. இழப்புக்கு உரிமதாரரையே பொறுப்பாக்கப்படும்.<br>9).உரிமதாரர்கள் வியாபாரிகளிடம் கட்டணம் வசூல் செய்யும்போது அதற்கான முறையாக நகராட்சி முத்திரை பதிக்கப்பட்ட கட்டண ரசீது கொடுக்கப்பட வேண்டும்.<br>10).உரிமதாரர் ஆடு,மாடு அறுவைக்கூடத்திற்குள் கட்டண வசூல் பணிக்கு நியமிக்க இருக்கும் நபர்கள் விபரம் புகைப்படத்துடன் கொடுக்கப்பட வேண்டும். | |
| | 1395 | **மன்றப்பொருள்:2**<br>காயல்பட்டணம் நகராட்சியில் புதிய குடிநீர் மேம்பாட்டுத்திட்டத்தின் பொன்னன்குறிச்சி தலைமை நீரேற்றும் நிலையத்தில் புதிய குளோரினேசன் பிளாண்ட் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.90 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மானம் எண்.1376 நாள்.24.03.2017 ன்படி அனுமதி பெறப்பட்டு 20.06.2017 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br>1) M/s ஆர்.கே.எண்டர்பிரைசஸ்,<br>10/615ஏ எழப்புலா,<br>பாலக்காடு , கேரளா — மதிப்பீடு ரேட்டை விட 0.11% குறைவு | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | 2) M/s மைக்ரோ டெக் இஞ்சினியரிங்,<br>எண்.34 பீலமேடு தொழிற்பேட்டை,<br>கோயம்புத்தூர் மதிப்பீடு ரேட்டை விட 7.18% கூடுதல்<br><br>மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s ஆர்.கே.எண்டர்பிரைசஸ், 10/615ஏ எழப்புலா,பாலக்காடு , கேரளா என்ற நிறுவனம் மதிப்பீடு ரேட்டை விட 0.11% குறைவாக கோரியுள்ளது. அதனால் அந்நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளினை அங்கிகரிக்க அனுமதிக்கு. | |
| | 1396 | **மன்றப்பொருள்: 3**<br>காயல்பட்டணம் நகராட்சியில் நகராட்சிப்பகுதியில் ஏற்கனவே அமைக்கப்பட்ட குளோரினேசன் பிளாண்டினை சீரமைத்து புதிய குடிநீர் மேம்பாட்டு திட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் குழாயில் பொருத்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 4.00 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மானம் எண்.1377 நாள். 24.03.2017ன்படி அனுமதி பெறப்பட்டு 20.06.2017 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br>1) M/s ஆர்.கே.எண்டர்பிரைசஸ்,<br>10/615ஏ எழப்புலா,<br>பாலக்காடு , கேரளா மதிப்பீடு ரேட்டை விட 0.39% குறைவு<br><br>2) ஆ/ள மைக்ரோ டெக் இஞ்சினியரிங்,<br>எண்.34 பீலமேடு தொழிற்பேட்டை,<br>கோயம்புத்தூர் மதிப்பீடு ரேட்டை விட 16.95% கூடுதல்<br><br>மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s ஆர்.கே.எண்டர்பிரைசஸ், 10/615ஏ எழப்புலா,பாலக்காடு , கேரளா என்ற நிறுவனம் மதிப்பீடு ரேட்டை விட 0.39% குறைவாக கோரியுள்ளது. அதனால் அந்நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை அங்கிகரிக்க அனுமதிக்கு. | அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td></td><td></td><td>.</td><td></td></tr>
<tr><td></td><td>1397</td><td>மன்றப்பொருள்: 4<br>நகராட்சியின் கணக்குகளை இன்றைய தேவைக்கேற்ப பராமரிக்கவும், நிதி மேலாண்மையை திறம்படுத்தவும், தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணி என்ற பணியமைப்பு உருவாக்குவதற்கு தமிழ்நாடு நகராட்சி பொதுப்பணி விதிகள் 1970-ன் (TAMIL NADU MUNICIPAL GENERAL SERVICE RULES 1970) விதி 1ன் கீழ் இடம் பெற்றுள்ள<table><tr><td>Class V</td><td>Category 2</td><td>Accountants, II and III Grade Municipalities</td></tr></table>நடைமுறையிலுள்ள கணக்குப்பணி தொடர்பான பதவிகளை தமிழ்நாடு நகராட்சி பொதுப்பணி விதிகள் 1970லிருந்து நீக்கம் செய்திடவும், விதி எண் 3(b) ன் கீழ் Class V வரிசை எண்:2ல் குறிப்பிடப்பட்டுள்ள Accountants, II and III Grade Municipalities பதவிப் பெயர்களை நீக்கம் செய்திட மன்றம் ஒப்புதல் வேண்டப்படுகிறது.</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>1398</td><td>மன்றப்பொருள்: 5<br>காயல்பட்டணம் நகராட்சிக்கு அனுமதிக்கப்பட்டுள்ள 3 எண்ணிக்கையிலான இளநிலை உதவியாளர்கள் பணியிடங்களில் ஒரு இளநிலை உதவியாளர் பணியிடத்தினை திரும்ப ஒப்படைத்து அதற்கு பதிலான ஒரு கணக்கு உதவியாளர் (Accountants Assistant) பணியிடத்தினை இந்நகராட்சிக்கு புதிதாக உருவாக்கிட மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>1399</td><td>மன்றப்பொருள்: 6<br>சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு சட்டம் 1986(சட்ட எண்:29/1986) ___ல் பிரிவு 3,6,மற்றும்25-களில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் மத்திய அரசு பிளாங்டிக் கழிவு மேலாண்மை பணிகளை முறைப்படுத்த பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள் 2016-களின் படி கீழ்க்கண்ட விபரப்படி தயாரிக்கப்பட்ட காயல்பட்டணம் நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணைவிதிகள் 2016-ன்படி தமிழ் மற்றும் ஆங்கிலம் துணைவிதிகளுக்கு மன்ற ஒப்புதலுக்கு வேண்டப்படுகிறது.</td><td></td></tr>
<tr><td></td><td>1400</td><td>மன்றப்பொருள்:7<br>காயல்பட்டணம் நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட இனங்களுக்கு 31.05.2017-ல் ஏலம் கோரப்பட்டது.</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>
<table>
<tr><td>வரிசை எண்</td><td>உரிமங்களின் பெயர்</td></tr>
<tr><td>1.</td><td>நகராட்சிக்கு பாத்தியப்பட்ட தினசரி மார்க்கெட் உரிமம்</td></tr>
<tr><td>2.</td><td>நகராட்சியின் ஆடு,மாடு அறுக்கும் தொட்டி ஏலம்</td></tr>
<tr><td>3.</td><td>நகராட்சிக்கு பாத்தியப்பட்ட பேருந்துநிலைய பேருந்து நுழைவுக்கட்டணம் வசூல் உரிமம்</td></tr>
<tr><td>4.</td><td>நகராட்சிக்கு பாத்தியப்பட்ட மரங்களின் மேலாதாயம்<br>அ).நகராட்சி அலுவலக தென்னை மரங்கள்<br>ஆ).பேருந்து நிலைய தென்னை மரங்கள்</td></tr>
<tr><td>5.</td><td>நகராட்சிக்கு பாத்தியப்பட்ட பேருந்துநிலைய உள்கடை எண்:5</td></tr>
<tr><td>6.</td><td>நகராட்சிக்கு பாத்தியப்பட்ட பேருந்து நிலைய உள்கடை எண்:6</td></tr>
<tr><td>7.</td><td>நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு (ம) வாகனங்களுக்கான உபயோகத்திற்கு லாயக்கற்ற பழையபொருட்கள்</td></tr>
<tr><td>8.</td><td>குடிநீர் திட்ட உபயோகத்திற்கு லாயக்கற்ற பழையபொருட்கள்</td></tr>
</table>
மேற்படி ஏலம் கோரப்பட்டதில் வரிசை எண்:1-ல் காணும் தினசரி மார்க்கெட் உரிமம் மட்டும் திரு.எஸ்.மகேஷ்,காயல்பட்டணம் என்பவரால் ஏலக் கேள்வி தொகை ரூ.158500/- என கோரப்பட்டது. வேறு ஏலக்கேள்வி இல்லாததாலும், அரசாங்க மதிப்பிற்கு ஏலக்கேள்வி கோரியுள்ளதாலும் திரு.எஸ்.மகேஷ் என்பவருக்கு வரிசை எண்:1ல் கண்ட தினசரி மார்க்கெட் உரிமத்திற்கான குத்தகையினை ஒப்படைக்கவும், மீதமுள்ள குத்தகையினங்களுக்கு மறு ஏலம் கோரவும் அனுமதிக்கு
</td><td></td></tr>
<tr><td></td><td>1401</td><td>மன்றப்பொருள்:8<br>காயல்பட்டணம் நகராட்சியில் நகராட்சியால் தினமும் சுமார் 16 டன் குப்பைகள் சேகரிக்கப்படுகிறது. இவ்வாறு சேகரிக்கப்படும் குப்பைகளை கொட்டுவதற்கு நகராட்சிக்கென்று சொந்தமாக குப்பைக்கிடங்கு எதுவும் இல்லாததால் சுமார் 50 வருடங்களாக நகராட்சிப்பகுதி 13 வது வார்டுக்குட்பட்ட பப்பரப்பள்ளி வண்ணான்துறை வட்டக்கிணறு என்ற அரசு புறம்போக்கு இடத்தில் கொட்டப்பட்டு வரப்படுகிறது.தற்பொழுது நகராட்சிப்பகுதிகளில் சேகரிக்கப்படும் மக்கும் குப்பைகளை தனியாக சேகரித்து அதனை மறு சுழற்சி முறையில் உரமாக பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி ஆணையரால் அறிவுறுத்தப்பட்டதின்படி நகராட்சி வளாகத்தில் உள்ள பழைய திடக்கழிவு மேலாண்மை திட்ட பயன்பாட்டில் இருந்த பழுதடைந்துள்ள அடிப்படை கட்டமைப்புகளை பயன்பாட்டிற்கு பயன்படுத்த ஏற்ற வகையில் சீரமைத்து தந்திட நகராட்சி சுகாதார ஆய்வாளரின் கோரிக்கையின்படி மேற்கண்ட கட்டிடத்தில் அடிப்படை கட்டமைப்புகள் செய்து மக்கும் குப்பைகளை மறு சுழற்சி செய்வதற்கு ஏற்ற வகையில் பிளாட்பார்ம் அமைத்திட தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.1.75 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | 1402 | **மன்றப்பொருள்:9**<br>காயல்பட்டணம் நகராட்சியில் தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் புதிய குடிநீர் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் தினமும் 3.65 ஆடுனு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வரப்படுகிறது. இதனை நகராட்சியின் பல்வேறு பகுதிகளில் உள்ள மேல் நிலை நீர்த்தேக்கத்தொட்டிகளில் ஏற்றப்பட்டு நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 90 டுீஊனு வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வரப்படுகிறது. இவ்வாறு நகராட்சிப்பகுதிகளில் குடிநிர் வழங்குவதற்கு ஒவ்வொரு பகுதிகளுக்கும் தனித்தனியாக வால்வுகள் அமைக்கப்பட்டு வால்வுகளை பாதுகாத்திடும் பொருட்டு தொட்டிகள் கட்டப்பட்டு பாதுகாப்பான முறையில சீரான அளவில் குடிநிர் விநியோகம் செய்யப்படுகிறது. இவ்வாறு வால்வுகளுக்கு பாதுகாப்பாக கட்டப்பட்டுள்ள வால்வு தொட்டிகள் சில இடங்களில் பழுதடைந்துள்ளதாலும் மேல் மூடி இல்லாததாலும் பாதுகாப்பான முறையில் குடிநீர் வழங்குவதில் சிரமம் ஏற்படுகிறது. இதனால் பொது மக்களுக்கு பாதுகாப்பான முறையில் குடிநீர் வழங்குவதற்கு ஏதுவாக பழுதடைந்துள்ள குடிநீர் வால்வு தொட்டிகளை சீரமைத்து மேல் மூடி அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி குழாய் பொருத்துநரின் கோரிக்கையின்படி மேற்கண்டவாறு பழுதடைந்துள்ள வால்வு தொட்டிகளை நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஆய்வு செய்து வழங்கப்பட்ட அறிவுரையின்படி தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.70 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| | 1403 | **மன்றப்பொருள்:10**<br>காயல்பட்டணம் நகராட்சியில் 11வது வார்டுக்குட்பட்ட பெரிய நெசவுத்தெரு சாலையில் வடகிழக்கு பருவமழையின் காரணமாக தண்ணீர் தேங்கி பொதுமக்கள் மற்றும் வாகன போக்குவரத்திற்கு மிகவும் சிரமம் ஏற்பட்டதால் பொதுமக்கள் நலன் கருதி போர்க்கால அடிப்படையில் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் தூத்துக்குடி அவர்களால் அறிவுறுத்தப்பட்டதின்பேரில் மழைநீர் தேங்கிய இடத்தில் WMM அடிக்கப்பட்டு சமன்படுத்தப்பட்டு பொதுமக்கள் மற்றும் வாகனங்கள் செல்வதற்கு ஏற்றவாறு தற்காலிகமாக சீரமைக்கப்பட்டது. தற்பொழுது மழைக்காலம் முடிவடைந்து விட்டதால் WMM மூலம் சீரமைக்கப்பட்ட பகுதியில் சாலை அமைத்துத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற அப்பகுதி | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | மக்களின் கோரிக்கையின்படி மேற்கண்ட சாலையினை நகராட்சி ஆயைாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகியோர் ஆய்வு செய்து மேற்கண்ட இடமானது மழைக்காலங்களில் தண்ணீர் தேங்கும் பகுதியாக இருப்பதாலும் தார்த்தளம் அமைத்தால் மழைநீரால் மீண்டும் சாலை பாதிக்கப்படும் என்பதாலும் மேற்கண்டவாறு ஏற்கனவே சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்ட பகுதிக்கு மட்டும் சிமெண்ட் கல் பதித்து சாலை அமைக்க அறிவுறுத்தியதின்படி மேற்கண்ட சாலையில் சேதமடைந்த பகுதிக்கு மட்டும் சிமெண்ட் கல் பதித்து சாலை அமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.7.00 இலட்சத்திற்கு நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | |
| | 1404 | **மன்றப்பொருள்: 11**<br>காயல்பட்டணம் நகராட்சியில் 8வது வார்டுக்குட்பட்ட கொச்சியார் தெரு சாலையில் வடகிழக்கு பருவமழையின் காரணமாக தண்ணீர் தேங்கி பொதுமக்கள் மற்றும் வாகன போக்குவரத்திற்கு மிகவும் சிரமம் ஏற்பட்டதால் பொதுமக்கள் நலன் கருதி போர்க்கால அடிப்படையில் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் தூத்துக்குடி அவர்களால் அறிவுறுத்தப்பட்டதின்பேரில் மழைநீர் தேங்கிய இடத்தில் WMM அடிக்கப்பட்டு சமன்படுத்தப்பட்டு பொதுமக்கள் மற்றும் வாகனங்கள் செல்வதற்கு ஏற்றவாறு தற்காலிகமாக சீரமைக்கப்பட்டது. தற்பொழுது மழைக்காலம் முடிவடைந்து விட்டதால் WMM மூலம் சீரமைக்கப்பட்ட பகுதியில் சாலை அமைத்துத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற அப்பகுதி மக்களின் கோரிக்கையின்படி மேற்கண்ட சாலையினை நகராட்சி ஆயைாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகியோர் ஆய்வு செய்து மேற்கண்ட இடமானது மழைக்காலங்களில் தண்ணீர் தேங்கும் பகுதியாக இருப்பதாலும் தார்த்தளம் அமைத்தால் மழைநீரால் மீண்டும் சாலை பாதிக்கப்படும் என்பதாலும் மேற்கண்டவாறு ஏற்கனவே சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்ட பகுதிக்கு மட்டும் சிமெண்ட் கல் பதித்து சாலை அமைக்க அறிவுறுத்தியதின்படி மேற்கண்ட சாலையில் சேதமடைந்த பகுதிக்கு மட்டும் சிமெண்ட் கல் பதித்து சாலை அமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.8.50 இலட்சத்திற்கு நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 1405 | **மன்ற பொருள்:12**<br>காயல்பட்டணம் நகராட்சி நகராட்சிகள் சட்டம் **1920** விதி எண்**15**ன் கீழ் அவசர அவசிய செலவினஙகள் மேற்கொண்டதற்கான பதிவேடு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்க்கும் வைக்கப்படுகின்றது. | பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது |
| | 1406 | **மன்றப்பொருள்:13**<br>காயல்பட்டணம் நகராட்சியில் வறட்சியின் காரணமாகவும் தாமிரபரணி ஆற்றில் நீர் இருப்பு குறைவாக இருப்பதால் ஏற்பட்டுள்ள குடிநீர் தட்டுப்பாட்டின் காரணமாகவும் தமிழநாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் காயல்பட்டணம் நகராட்சிக்கு செய்யப்பட்டு வந்த குடிநீர் விநியோகம் பெரிதும் பாதிக்கப்பட்டு 10தினங்களுக்கு ஒருமுறை குடிநீர் வழங்கப்பட்டு வந்தது.இதனால் பெரும் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் ஏற்பட்டது. இதனால் ஏற்பட்டுள்ள குடிநீர் தட்டுப்பாட்டினை சமாளிக்க நகராட்சியின் மூலம் போர்க்கால அடிப்படையில் தேவையான நடவடிக்கைகளை எடுக்க மாவட்ட ஆட்சியர்,தூத்துக்குடி அவர்களால் ஆய்வுக்கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டதின்படி குடிநீர் தட்டுப்பாட்டினை சமாளிக்க 6000லிட்டர் கொள்ளளவு கொண்ட டிராக்டர் வாகனம் மூலம் குடிநீர் விநியோகம் செய்ய நகராட்சியில் உள்ள 18 வார்டுகளை 4 மண்டலங்களாக பிரித்து கீழ்கண்டவாறு மதிப்பீடுகள் தயாரிக்கபட்டது.<br>மண்டலம் 1 ரூ. 5.00இலட்சம் (வார்டு எண்.1 முதல் 4)<br>மண்டலம் 2 ரூ. 5.00 இலட்சம் (வார்டு எண்.5 முதல் 8)<br>மண்டலம் 3 ரூ. 7.00 இலட்சம் (வார்டு எண். 9 முதல் 13)<br>மண்டலம் 4 ரூ.7.00 இலட்சம் (வார்டு எண்.14 முதல் 18)<br>மேற்கண்டவாறு தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு மன்ற அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அன்று வேலை உத்திரவு வழங்கப்பட்டது. இப்பணியில் 6000லிட்டர் கொள்ளளவு கொண்ட டிராக்டர் வாகனம் மூலம் நகராட்சிப்பகுதிகளில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் பகுதி மற்றும் குடிநீர் விநியோகம் சீராக இல்லாத பகுதிகளில் விநியோகம் செய்யப்பட்டு மக்களுக்கு தேவையான அளவில் குடிநீர் வழங்கப்பட்டது. மேலும் காயல்பட்டணம் நகராட்சிக்கான புதிய குடிநீர் மேம்பாட்டுத்திட்டம் முடிவடைந்து 08.03.2017அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் திறக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது. இத்திட்டத்தில் பம்பிங் | திருத்திய மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வழங்கப்படுகிறது |

| | | | |
|---|---|---|---|
| | | செய்யப்படும் குடிநீரினை நகராட்சிப்பகுதிகளில் கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகளில் சேமிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதன்படி முதல் கட்டமாக நகராட்சிப்பகுதிகளில் உள்ள 2,3,4இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல் நிலை நீர்த்தேக்கத்தொட்டிகளை புதிய குடிநீர் மேம்பாட்டுத்திட்டத்தின் பம்பிங் குழாயில் இணைக்கப்பட்டு அப்பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டது. மற்ற பகுதிகளில் உள்ள மேல் நிலை நீர்த்தேக்கத்தொட்டிகள் இத்திட்டத்தின் பம்பிங் பிரதான குழாயில் இணைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அப்பணி முடிவடையும் வரை பொதுமக்களின் நலன் கருதி வறட்சியினை முன்னிட்டு வாகனம் மூலம் குடிநீர் விநியோகம் செய்யும் பணி 1மாத காலத்திற்கு மேற்கொள்ளப்பட்டது.இதன்படி மேற்கண்டவாறு உள்ள இரண்டாவது மண்டலத்தின் பகுதிகளில் வாகனம் மூலம் குடிநீர் விநியோகம் செய்த ஒப்பந்ததாரர் திரு.T.மாதவன் என்பவர் மூலம் அனைத்து மண்டலங்களிலும் கூடுதலாக குடிநீர் விநியோகம் செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. அதன்படி மதிப்பீட்டுத்தொகை ரூ.5.00இலட்சத்தினை விட கூடுதலாக ரூ.494950/- வேலை மதிப்பில் பணி மேற்கொள்ளப்பட்டது.இதனால் பணியின் அவசர அவசியம் கருதி மேற்கொள்ளப்பட்ட குடிநீர் விநியோகப்பணியில் ஏற்பட்ட கூடுதல் செலவினத்தொகையினை ஒப்பந்ததாரர்க்கு வழங்கவும் அதற்கு தயாரிக்கப்பட்ட திருத்திய மதிப்பீடு ரூ.9.95இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | |
| | 1407 | **மன்ற பொருள்:14**<br>காயல்பட்டணம் நகராட்சியில் கீழ்க்கண்டவாறு தெரு விளக்குகள் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது.<br>40 வாட்ஸ் குழல் விளக்குகள் (வுரடிந டுபைாவ) - 1152 எண்ணம்<br>150 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் - 119 எண்ணம்<br>250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் - 150 எண்ணம்<br>2ஒ36 வாட்ஸ் சி எப் எல் விளக்குகள் - 108 எண்ணம்<br>ஊயர் கோபுர மின் விளக்குகள் - 6 எண்ணம் | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | மொத்தம் - 1535 எண்ணம்<br>மேற்கண்டவாறு உள்ள நகராட்சி தெருவிளக்குகளை தனியார் மூலம் பராமரிக்கும் பணி செய்ய தலைமைப்பொறியாளர்,நகராட்சி நிர்வாக ஆணையரகம்,சென்னை அவர்களின் கடிதம்.நக.எண்.45490/2013-9/DO3 நாள்.24.01.2014 ன்படி அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அதன்படி ஸ்ரீகங்கா எலக்ட்ரிக்கல்ஸ்,திருநெல்வேலி என்ற நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டு தற்பொழுது வரை பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. தற்பொழுது இந்நிறுவனத்தின் தெருவிளக்கு பராமரிப்பு காலம் 10.07.2017 உடன் முடிவடைகிறது. ஆனால் தற்பொழுது நகராட்சியில் உள்ள தெருவிளக்குகள் அனைத்தையும் எல்.இ.டி விளக்குகளாக (Energy Saving Light) மாற்ற அரசின் மூலம் முடிவெடுக்கப்பட்டு அதன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தற்பொழுது தெருவிளக்குகளை மாற்றுவதற்கு ஆகும் செலவினத்திற்கான மதிப்பீடு தயாரிக்கும் பணிக்கு தகுதியான நிறுவனங்களை தேர்ந்தெடுக்க ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. அதனால் தற்பொழுது காயல்பட்டணம் நகராட்சியின் தெருவிளக்குகளை தனியார் மூலம் பராமரிக்கும் பணி செய்ய மீண்டும் மதிப்பீடு தயாரித்து அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரவேண்டிய அவசியம் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் நகராட்சியில் உள்ள தெருவிளக்குகளை பராமரிக்க தேவையான மின்பணியாளர்கள் நகராட்சியில் இல்லாத காரணத்தினாலும் தெருவிளக்கு பணி அவசியமான பணியாக இருப்பதாலும் தற்பொழுது நகராட்சியில் உள்ள தெருவிளக்குகள் அனைத்தையும் LED விளக்குகளாக மாற்ற அரசு முடிவெடுத்து பூர்வாங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாலும் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சியின் தெருவிளக்குகள் அனைத்தையும் LED விளக்குகளாக மாற்றும் பணிக்கான நடவடிக்கைகள் முடிவடையும் வரை ஏற்கனவே நகராட்சி தெருவிளக்குகளை பராமரித்து வரும் முந்தைய ஆண்டு ஒப்பந்ததாரர் ஸ்ரீகங்கா எலக்ட்ரிக்கல்ஸ்,திருநெல்வேலி என்ற நிறுவனத்தின் மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் அதற்குரிய வருடாந்திர செலவினத்தொகையினை ஏற்கனவே மேற்கண்ட நிறுவனத்திற்கு நகர்மன்ற தீர்மானம் எண் 1280 நாள். 05.07.2016 ன்படி நகர்மன்றத்தால் அனுமதிக்கப்பட்ட மதிபபீட்டு தொகையான ரூ.23.82இலட்த்தின்படி பராமரிப்புத்தொகை வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | |

| | | | |
|---|---|---|---|
| | 1408 | **மன்றப்பொருள்: 15**<br>காயல்பட்டணம் நகராட்சிப் பகுதிகளில் டெங்கு கொசு ஒழிப்பு பணிக்காக மாவட்ட ஆட்சித்தலைவர், தூத்துக்குடி, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் சுற்றறிக்கை (ம) பொது சுகாதார துணைஇயக்குநர்,சுகாதாரப் பணிகள், தூத்துக்குடி அவர்களின் கடிதம் மற்றும் ஆய்வுக்கூட்ட அறிவுரையின்படியும் தொடர்ந்து தினக்கூலி பணியாளர்கள் 33 நபர்கள் பணியில் ஈடுபடுத்திட அவர்களுக்கு தினக்கூலியாக மாவட்ட ஆட்சத்திலைவர் அவர்களின் அனுமதிக்கப்பட்ட விலையான ரூ.230/- வீதம் ஊதியம் பொதுநிதியிலிருந்து வழங்குவதற்கு மன்ற அனுமதிக்கு. | அனுமதிக்கப்பட்டது |
| | 1409 | **மன்ற பொருள்:16**<br>காயல்பட்டணம் நகராட்சியில் தற்போது திடக்கழிவு மேலாண்மையினை சிறப்பாக செயல்படுத்தும் விதமாக தினந்தோறும் கடைகள், ஹோட்டல், பழக்கடை போன்றவற்றில் (Commercial Establishment) உருவாகும் குப்பைகளை தினந்தோறும் வழங்குவதற்கு தனியாக வாகனம் அனுப்பப்பட்டுவருகிறது. தற்சமயம் குடிநீர் விநியோகம் செய்யும் டிராக்டர் பயன்படுத்தி வாடகைக்கு டிரெய்லர் மட்டும் பயன்படுத்தப்பட்டுவருகிறது. குடிநீர் விநியோகத்திற்கு பயன்படுத்தப்பட்டுவரும் டிராக்டர் இழுவைக்கு டிரைவர் தேவைப்படுவதால் இந்நகராட்சிக்கு என சொந்தமாக ஒரு டிரெய்லர் மட்டும் வாங்கவும் அதற்குரிய உத்தேச செலவினத்தொகை ரூ.1,10,000/- க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்படுகிறது மேலும் டிரெய்லர் வாங்கிட நடவடிக்கை எடுக்கும் வரை தற்சமயம் அவசர அவசியத்தை முன்னிட்டு தற்காலிகமாக டிரைலர் பயன்படுத்திட வாடகைக்கு வாங்கி பயன்படுத்தி திடக்கழிவு |

| | | | |
|---|---|---|---|
| | | | மேலாண்மை பணிகள் வியாபாரஸ்தலங்களில் மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது |
| | 1410 | **மன்ற பொருள்:17**<br>காயல்பட்டணம் நகராட்சியில் மொத்தம் உள்ள 18 வார்டுகளில் துப்புரவு பணிகள் மேற்கொள்ள மொத்த துப்புரவு பணியாளர்கள் 25 நபர்கள் மட்டுமே உள்ளனர். ஆகையால் 22.01.2015 அன்று நகராட்சி நிர்வாக ஆணையரகம் மூலம் ந.க.எண்:38162/p3 /2014-12-ன்படி நமது நகராட்சி துப்புரவு பணிக்காக தனியார் ஒப்பந்தப்புள்ளி மூலம் 139 நபர்கள் பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டது. அதன் ஒரு பகுதியாக கடந்த பிப்ரவரி மாதம் முதல் 50 துப்புரவு பணியாளர் தனியார் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.தற்சமயம் திடக்கழிவு மேலாண்மையினை சிறப்பாக செயல்படுத்தும் விதமாக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. மொத்தம் உள்ள 18 வார்டுகளில் உள்ள வீடுகளின் எண்ணிக்கை 15041 ஆகும். அனைத்து வீட்டிலும் மட்கும் குப்பை, மட்காத குப்பை என பிரித்து வாங்கவும்,கழிவுகளை சேகரிக்கவும் 150 வீட்டிற்கு 1 நபர் வீதம் 100 நபர்கள் தேவைப்படுகிறது. புதிய பேருந்து நிலையம், கடற்கரை பூங்கா,கழிப்பறைகள், பயோகேஸ் கம்போஸ்ட் திட்ட பணிகளுக்கு 20 நபர்கள் தேவை உள்ளது. எனவே மொத்தம் 120 நபர்கள் தேவைப்படுகின்றன. ஆனால் தற்சமயம் தனியார் மூலம் பணியமர்த்தப்பட்ட 50 துப்புரவு பணியாளர்கள் மூலம் இப்பணியினை செய்ய இயலாததால் நிர்வாக நலன் கருதி மேற்கண்ட பணியினை சிறப்பாக செய்திட இன்னும் தற்போது குறைந்த பட்சம் 40 நபர்கள் தனியார் ஒப்பந்தப்புள்ளி மூலமாக துப்புரவு பணியாளர்கள் பணியில் ஈடுபடுத்திட மேல்நடவடிக்கை எடுக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்படுகிறது விதிகளின்படி டெண்டர் கோர நடவடிக்கை எடுத்திட அனுமதிக்கப்படுகிறது |
| | 1411 | **மன்றப்பொருள்:18**<br>ஸ்ரீவைகுண்டம் பொன்னன்குறிச்சியில் அமைந்துள்ள காயல்பட்டணம் நகராட்சியின் தலைமை நீரேற்றும் நிலையத்தில் உள்ள 2.00இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர்த்தேக்கத்தொட்டியில் சுத்தம் செய்யும் பொழுது அடிப்பகுதியில் தேங்கும் நீரினை அகற்றுவதற்கு ஏதுவாக Submersible Dewatering Pump set ஒரு எண்ணம் வாங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது | அனுமதிக்கப்படுகிறது |

| | | | |
|---|---|---|---|
| | 1412 | **மன்றப்பொருள்: 19**<br>காயல்பட்டணம் நகராட்சிக்கு விநியோகம் செய்யப்டும் குடிநீரினை நகராட்சிப்புகதிகளில் கட்டப்பட்டுள்ள 20 எண்ணம் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகளில் சேமிக்கப்பட்டு பொதுமக்களுக்கு பாதுகாப்பான முறையில் விநியோகம் செய்யப்பட்டு வரப்படுகிறது. இவ்வாறு குடிநீரினை சேமிக்கப்பயன்படும் மேல்நிலைநீர்ததேக்கத்தொட்டிகளை 15 நாட்களுக்கு ஒருமுறை கழுவி சுத்தம் செய்யவேண்டியது அவசியமாகிறது. நகராட்சியில் குடிநீர் பணிக்கு போதுமான பணியாளர்கள் இல்லாததால் மதிப்பீடு தயாரித்து ஒப்பந்தப்புள்ளி கோரி மேற்கண்ட பணியினை மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது. | மதிப்பீடு தயார் செய்து டெண்டர் கோர அனுமதிக்கப்படுகிறது |
| | 1413 | **மன்றப்பொருள்: 20**<br>காயல்பட்டணம் நகராட்சிக்கு விநியோகம் செய்யப்டும் குடிநீரினை நகராட்சிப்பகுதிகளில் கட்டப்பட்டுள்ள 20 எண்ணம் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகளில் சேமிக்கப்பட்டு பொதுமக்களுக்கு பாதுகாப்பான முறையில் விநியோகம் செய்யப்பட்டு வரப்படுகிறது. மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகளில் தண்ணீர் சேமிக்கப்படும் அளவானது தெரிந்து கொள்ளும் வகையில் ஒவ்வொரு மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகளிலும் அளவுமானி பொருத்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்படுகிறது |
| | | | |